1973 நவம்பர் 21]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இதற்கு அவார்ட் இன்னும் பாசாக வில்லையா? அவார்ட் பாசாகிப் பணம் கொடுக்காமல் இருப்பது போல் தெரிகிறது. காலதாமதம் ஆவதற்குக் காரணங்கள் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அவார்ட் பாசாகி பணம் கொடுக்கும் நிலையில் இருக்கிறது.

Report on electronics industry

* 270 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the working group appointed by the Government have submitted any report on the electronics industry in this State; and

(*b*) if so, the details of the report?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) விவர அறிக்கை ஒன்று @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

Potassium Chlorate plant in Madurai

* 271 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to instal a Potassium Chlorate Plant in Madurai district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், திருமங்கலம் மெட்டல் பவுடர் கம்பெனியும் கூட்டுத்துறையில் அமைத்துள்ள பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் நரசிங்கம்பட்டி கிராமத்தில் ரூபாய் 70 லட்சம் செலவில் ஆண்டொன்றுக்கு 1825 டன் உற்பத்தி செய்யும் பொட்டாசியம் குளோரேட் தொழிற்சாலையை அமைத்து வருகிறது.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, இந்த பொட்டாசியம் குளோரேட் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு மிகவும் அவசியமானது. தீப்பெட்டித் தொழிற்சாலையைச் சிறு தொழி

@ 433–438-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

லாகக் கொண்டு நடத்துகிறவர்கள் இந்த பொட்டாசியம் குளோரேட் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அரசு உற்பத்தியை விரைவுபடுத்த முன் வருமா என அறிய விரும்புகிறேன். மேலும், இப்போது கிடைப்பதை சமமாக இந்தச் சிறு தொழிற்சாலைகளுக்குக் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது நமக்கு வெளி மாநிலத்திலிருந்து வருகிறது. ஆகவே தான் இந்தத் தட்டுப்பாடு இருக்கிறது. நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் அறிவித்து இருக்கிறேன், மத்திய அரசாங்கம் இப்போது தருவதை மாநில அரசாங்கத்திற்கே தந்து விடுங்கள். நாங்கள் மாநிலத்தில் உள்ளவர்களுக்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கிறோம் என்று. இந்தப் புதிய தொழிற்சாலை நிறுவுவதில் சிறு தொழில் அதிபர்களுக்கு 49 சதவிகிதம் பங்கு கொடுத்து அவர்களையே அதற்கு முழு உரிமையாளர்களாக ஆக்கும் வகையில் வழி வகை செய்யப்பட்டிருக்கிறது.

THIRU K. T. K. THANGAMANI : May I know when the plant is likely to be commissioned?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விரைவாக ஏற்படும் என்று கருதுகிறேன். எங்களுடைய திட்டப்படி 1974-ம் ஆண்டு இறுதியில் உற்பத்தித் தொடங்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : May I know whether the location of the factory has been fixed, whether it is going to be Melur or some other place? There has been complaint that the present place should not be fixed since there is water scarcity there; some other place has to be fixed. Has that been done?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை பெரும்பாலும் மேற்கு இராமநாதபுரம் சிவகாசியை ஒட்டிய பகுதிகளில்தான் இருக்கின்றன. அங்கே சிலயிடங்கள் பரிசீலிக்கப்பட்டன. அங்கத்தினர் தெரிவித்தது போல் தண்ணீர் இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டும். ரசாயனத் தன்மை கொண்ட தண்ணீர் தேவைப்படுகிறது. மதுரை மாவட்டம் மேலூருக்குப்

1973 நவம்பர் 21]

பக்கத்தில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆராய்ச்சி செய்த அளவுக்கு அங்கே போதுமான தண்ணீரும், நல்ல தண்ணீரும் கிடைப்பதாகத் தெரிகிறது.

காஸ் சிலிண்டர்கள் உற்பத்தி

*272 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், பேரவையில் 26—2—1973 அன்று வினா எண் 168-க்கு அளித்த விடையை யொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

Gas Cylinders உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசின் இசைவுக் கடிதம் கோரி எப்பொழுது விண்ணப்பிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1972-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் தேதியன்று.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் தொடங்க வேண்டுமானால் 'லெட்டர் ஆப் இன்டன்ட்' இசைவுக் கடிதம் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போல் கடன் மனுக்கள் பரிசீலிக்கிற முறையில் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை எண்ணத்தில் கொண்டு தான் அண்மையில் மத்திய அமைச்சர் ஒவ்வொரு மாநிலத்திலும் 'கம்பைன்ட் செக்ரிடேரியட்' உருவாக்க வேண்டுமென்று சில மாதங்களுக்கு முன்னால் அறிவித்ததாக 'மெயில்' பத்திரிக்கையில் செய்தி வெளியாகி இருக்கிறது. ஆகவே, அது குறித்து மத்திய அரசு நம்முடைய அரசுக்கு ஏதேனும் செயற்குறிப்பு அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு ஆண்டுக்கு முன்னாலே கூடிய தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய அரசாங்கம் இந்தக் கருத்தை வலியுறுத்தி காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும், அப்படியில்லை யென்றால் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் பல்வேறு இலாக்காக்களை இணைத்துப் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னோம். அப்போதே மத்திய அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை நிறைவேற்ற ஒரு ஆண்டு எடுத்து இருக்கிறது.